செ.வெ.எண்:304 நாள்:11.05.2018

# கலை பண்பாட்டுத்துறை
# மண்டலக் கலை பண்பாட்டு மையம். திருநெல்வேலி
# ஓவிய-சிற்பக் கலைகண்காட்சி
## செய்திக் குறிப்பு

தமிழ்நாடு அரசின் கலை பண்பாட்டுத் துறை, நமது நாட்டின் பாரம்பரியக் கலைகளையும் பண்பாட்டினையும் கலைப் பண்புகளை மேம்படுத்தவும், ஓவியக்கலை என்னும் நான்காம் இயல், சிற்பக்கலை என்னும் ஐந்தாம் இயல் ஆகியவற்றினை வளர்த்திடும் நோக்கிலும். அக்கலையில் ஈடுபட்டுள்ள கலைஞர்களை ஊக்குவிக்கும் வகையிலும். வளரும் இளம்கலைஞர்களிடையே உள்ள கலைப்படைப்புத் திறனை வெளிக்கொணர்ந்து வளர்க்கும் நோக்கிலும். கலைப் பயிற்சிகள் அளித்தும். பல்வெறு கலை நிகழ்ச்சிகளை நடத்தியும் செயல்பட்டு வருகிறது. மேலும், தற்போது திருநெல்வேலி, விருதுநகர், கன்னியாகுமரி மற்றும் தூத்துக்குடி மாவட்டத்தை சார்ந்த ஓவியர்களுக்கு திருநெல்வேலி மாவட்டத்தில் ஓவிய-சிற்பக் கலைகாட்சிகள் நடத்திட வாய்ப்புகள் வழங்கி அவர்களது கலைத் திறமையை வெளிப்படுத்திடத் திட்டமிடப்பட்டுள்ளது.

இந்நிலையில். திருநெல்வேலி மாவட்டத்தில் பாளையங்கோட்டை, அரசு அலுவலா் **ஆ** குடியிருப்பில் அமைந்துள்ள **கலை பண்பாட்டு வளாகம் அரங்கத்தில்** வருகின்ற **13-05-2018 முதல் 15-05-2018** வரை ஓவிய-சிற்பக் கலைகாட்சி தொடங்கப்பட உள்ளது. இக்கண்காட்சியில் திருநெல்வேலி, விருதுநகர், கன்னியாகுமரி மற்றும் தூத்துக்குடி மாவட்டத்தை சார்ந்த ஓவியர்கள் தங்களது தஞ்சாவூர் ஓவியங்கள், மரபு வழி மற்றும் நவீன பாணி ஓவியங்களை முறையாக வைத்திடும் வகையில் நடத்தப்படவுள்ளது. கலைகண்காட்சியில் சிறந்த ஓவியங்களுக்கு முதல் பரிசு தொகையாக ரூ.3500/- வீதம் பத்து நபா்களுக்கும், இரண்டாம் பரிசு தொகையாக ரூ.2500/- வீதம் பத்து நபா்களுக்கும் மூன்றாம் பரிசு தொகையாக ரூ.1500/- பத்து நபா்களுக்கும் வழங்கப்பட உள்ளன. பங்கு கொள்ளும் அனைவருக்கும் கலை பண்பாட்டுத் துறை சார்பில் பங்கேற்புச் சான்றிதழ்கள் வழங்கப்படும்.

**நடைபெறும் இடம்** :

**கலை பண்பாட்டு வளாகம்**
**மண்டலக் கலை பண்பாட்டு மையம்,**
**870-21. அரசு அலுவலர் ஆ குடியிருப்பு.**
**திருநெல்வேலி – 7.**
**தொலைபெசி எண்.0462-2553890.**
**அலைபேசி எண்.88703-92365.**

ஓவியக் கலைஞர்கள் இதனை ஒரு சிறந்த வாய்ப்பாகக் கருதி பயனடையுமாறும் பொதுமக்கள் பார்வைக்கு வைக்கப்பட்டுள்ள ஓவியங்களை சந்தைபடுத்தப்படுவதால் பொதுமக்கள் ஓவியக்கலைகாட்சியை பார்வையிடவும் ஓவியங்களை வாங்கி பயன்பெறுமாறும் திருநெல்வேலி கலை பண்பாட்டுத் துறை உதவி இயக்குநர் அவர்கள் கேட்டுக் கொண்டுள்ளார்கள்.

வெளியீடு : செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், திருநெல்வேலி.